(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(2).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 ஓகத்து 08 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 ஓகத்து 21, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 யூலை மாதம் 18 ஆம் திகதிய 1819/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2013 செத்தெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2609/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பொழிப்பின் 70 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புத் தொடர்பான நீதிமன்ற மீளாய்வுக்கான அரசியலமைப்பு சார்ந்த ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் இணங்குகின்றாரா என்பதையும்;

(ii) அவ்வறிக்கையிலுள்ள சட்டமொன்றின் அரசியலமைப்புக்கு இணங்கியொழுகின்ற தன்மையை உயர்நீதிமன்றத்தின் முன்னே வெற்றிகரமாக விசாரிப்பதற்காக, குறிப்பாக அவசர சட்டமூலங்கள் தொடர்பில், வழங்கப்பட்டுள்ள ஏற்புடைய காலம் மிகவும் குறுகியதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலைமையை பற்றி கவனம் செலுத்தி அதற்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2935/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் பண்டத்தர முதல் மிதெல்லவெல வரை நீர்க்குழாய்களை நீடிப்பதற்காக 2010 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அங்குரார்ப்பண வைபவமொன்று நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) இரண்டு வருடங்களுக்கும் அதிக காலம் கடந்துள்ள போதிலும் இது வரை குழாய் நீர் வழங்கப்படவில்லை என பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குடிநீர் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தேவையான நிதியங்கள் வழங்கப்பட்டிருப்பின், இந்த நீர்வழங்கும் திட்டத்தை நிறுத்தியுள்ளமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iv) மேற்படி பிரச்சினைக்குரிய விடயங்களை தீர்த்துவைத்து பிரதேச மக்களுக்கு கூடியவிரைவில் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2998/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) 2009 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில்,

(i) ஒவ்வொரு மாவட்ட ரீதியிலும் இடம்பெற்றுள்ள சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி சம்பவங்களின் இயல்புக்கு ஏற்ப ஒவ்வொரு சம்பவத்தினதும் எண்ணிக்கை;

(iii) குறித்த சம்பவங்களுக்கு இலக்காகிய பெண் பிள்ளைகளினதும் ஆண் பிள்ளைகளினதும் எண்ணிக்கை;

வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி சம்பவங்களுக்கு இலக்கான பிள்ளைகளில் தாய் அல்லது தந்தை வெளிநாடு சென்றுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3046/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து கொழும்பு மாநகரசபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள சுமார் ரூபா. 150 கோடி வரிப்பணக் கட்டணத்தை மேற்படி நிறுவனங்களிலிருந்து அறவிட முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளிலிருந்து கொழும்பு மாநகரசபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள வரிப்பணக் கட்டணம் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) குறித்த வரிப்பணக் கட்டணத்தை அறவிடுவதற்கு மாநகர திறைசேரி இற்றை வரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து மேற்படி வரிப்பணக் கட்டணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3067/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) வட மத்திய மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) வட மத்திய மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3111/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு பங்கு பரிவர்த்தனை தொடர்பில்,

(i) தொடக்கத்திலிருந்து விசாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட மோசமான அக உறுப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய சம்பவங்களின் பெயர்கள், சம்பந்தப்பட்ட தொகைகள் மற்றும் இறுதியாக எடுக்கப்பட்ட தீர்மானம்;

(iii) 'குவித்து முடக்குதல்' போன்ற சூழ்ச்சித்திறத்துடன் சந்தையைக் கையாளுதல் இடம்பெற்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை;

(iv) மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள், விசாரணைகள் எப்போது நடாத்தப்பட்டது மற்றும் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானம் என்பவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கடந்த 5 வருடங்களுக்கான,

(i) பங்கு பரிவர்த்தனை தொடர்பில் கம்பனிகள் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும்;

(ii) சந்தேகிக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கம்பனிகள் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டதற்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பங்கு பரிவர்த்தனையில் இடம்பெறுகின்ற சூழ்ச்சித்திறத்துடனான கையாளுகைகளிலிருந்து விடுபடுவதற்கு நடைமுறையிலுள்ள சட்டங்கள் போதுமானவையா என்பதையும்;

(ii) இன்றேல், சூழ்ச்சித்திறத்துடனான கையாளுகைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3196/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் மற்றும் பிற வேலைவாய்ப்புகளின் நிமித்தமும் சென்றுள்ள பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் பெண்களும் ஆண்களும் கடுமையாக துன்புற்று தற்போது அந்நாட்டில் "ஒலாயா" தடுப்பு முகாமிலும் "ஜித்தா" பாலத்திற்குக் கீழும் தங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருத்தமான தொழில் அமைவிடங்கள் கிடைக்காமை, துன்புறுத்தல்கள் மற்றும் ஊதியம் செலுத்தப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் அதற்குக் காரணமாய் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இலங்கையர்களை உடனடியாக இந் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு, நலனோம்புகை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு துரித கதியில் நடைமுறைப்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3359/ '12

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சுக்கு உரித்தாயுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படும் அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சார்ந்துள்ள தரங்கள் யாவை;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் காணப்படும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தும் மொத்தப் பணத் தொகை யாது;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யார்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரச வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பிரத்தியேக வாகனங்களை வேறுபடுத்தி இனம் காணும் முறையியலொன்று காணப்படுகின்றதா;

(ii) ஆமெனில், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா;

(iii) அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு உரித்தான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் உரிய நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3407/ '13

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் கடற்றொழில் துறைசார்ந்ததாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள,

(i) மீன்பிடி வள்ளங்கள்;

(ii) மீன்பிடி வள்ளங்களுக்கு தேவையான பொருட்கள்;

(iii) மீன்பிடி வள்ளங்களுக்கான என்ஜின்கள்;

(iv) வலைகள், உபகரணங்கள் அல்லது வலைகள், உபகரணங்களுக்கு தேவைப்படும் பொருட்கள்;

(v) ஏனைய மீன்படி உபகரணங்கள்

ஆகியவற்றின் அளவு மற்றும் அவற்றிற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி காலகட்டத்தில் இந்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட,

(i) மீன்பிடி வள்ளங்கள்;

(ii) மீன்பிடி வள்ளங்களுக்கு தேவையான பொருட்கள்;

(iii) பீன்பிடி வள்ளங்களுக்கான என்ஜின்கள்;

(iv) வலைகள், உபகரணங்கள் அல்லது வலைகள், உபகரணங்களுக்கு தேவையான பொருட்கள்;

(v) வேறு மீன்பிடி உபகரணங்கள்;

ஆகியவற்றின் அளவு மற்றும் அவற்றிற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3515/ '13

கௌரவ வசந்த அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் அல்லது மீள்சுழற்சிக் கருத்திட்டம் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு கிடைக்கின்ற பணத் தொகையை செலவிடுவதற்கு ஏற்புடையதான சட்ட ரீதியான முறையியல்;

(ii) மேற்படி முறையியலுக்குப் புறம்பாக பணத்தை செலவிட்டு முறைகேடு எதனையும் மேற்கொண்டிருப்பின் அது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை

யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தளை மாநகர சபைக்கு சுன்யா (SUNYA) எனும் கருத்திட்டமொன்றின் கீழ் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் பொருட்டு நிதி ஏற்பாடுகள் கிடைத்துள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட்ட திகதிகள் யாவை;

(iii) அதன் மூலம் வழங்கப்பட்டுள்ள பணத் தொகை யாது;

(iv) மேற்படி கருத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியிருந்த மற்றும் முடிவுறுத்த உத்தேசமாயிருந்த திகதிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்கான பணம் உத்தேச பணியின் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ளதா;

(ii) இற்றையாகின்றபோது கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3595/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடந்த 5 வருடங்களினுள் அரசு செலவிட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு சம்பந்தமாக தீர்மானம் எடுப்பவர்கள் யாவரென்பதையும்;

(iii) உணவு வழங்குதல் சம்பந்தமான அறிவுரைகள் உரியவாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதைப் பற்றி பின்னாய்வு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதை மேற்கொள்பவர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் திருப்தியடையக்கூடிய மட்டத்தில் இடம்பெறுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3634/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக எண்ணெய்த் தாங்கி பண்ணை நிர்மாணம் தொடர்பாக,

(i) கருத்திட்டத்தின் இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம்;

(ii) கருத்திட்டச் செலவினம் எவ்வாறு நிதியிடப்பட்டது;

(iii) கடன் வசதிகளுக்கான நியதிகள், ஏதும் இருப்பின்;

(iv) நிதிக் கிரயம் மற்றும் கடன் வட்டி ஆகியவற்றின் கொடுப்பனவு இடம்பெற்றதன் பின்னர் கருத்திட்டம் எப்போது காசோட்ட இலாப நட்டமற்ற நிலையை அடையும்;

(v) ஒவ்வொரு தாங்கியினதும் கொள்ளளவு;

(vi) தாங்கிகள் ஒவ்வொன்றும் பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள் அல்லது அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதிகள்

ஆகியவற்றை அவர் கூறுவாரா?

(ஆ) (i) எதிர்பார்க்கப்படும் காப்பறை எரிபொருள் (bunker fuel) விமான எரிபொருள் (aero fuel) மற்றும் எல். பி. ஜி. (LPG) ஆகிவற்றை ஏற்றிவரும் எண்ணெய்க் கப்பல்களை விடுவிக்க தேவைப்படும் தாங்கிகளின் எண்ணிக்கை;

(ii) இற்றை வரையில் துறைமுகத்திற்கு வந்துள்ள மேலே குறிப்பிடப்பட்ட எரிபொருள் வகைகளை விடுவித்துள்ள கப்பல்களின் எண்ணிக்கையையும்;

(iii) மூல கருத்திட்டத்திற்கிணங்க வருடமொன்றுக்கு துறைமுகத்திற்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணெய்க் கப்பல்களின் எண்ணிக்கையையும் மாதமொன்றுக்கு மேற்படி எரிபொருள் வகைகளை விடுவிக்க தேவையான தாங்கிகளின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3681/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) செழிப்பான தென்னங் காணிகள் துண்டாக்கப்பட்டு ஏலத்தில் விடப்படுதல், உள்நாட்டுத் தேங்காய் உற்பத்தி குறைவடைவதற்கும் தேங்காயின் விலை அடிக்கடி அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளதால், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) சிறு தென்னந்தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) தெங்கு நிவாரணம் வழங்கப்படும் முறையியல் யாது;

(iv) புதிதாக தெங்குப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3698/'13

கௌரவ அனுர திசாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணப் பட்டியலில் எரிபொருள் சீராக்கல் கட்டணம் சேர்க்கப்பட்டு அறவிடப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணம் விதிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணத்தை அறவிடுவதற்கான காணரங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணம் அறவிடப்பட்ட தினம் முதல் ஒவ்வொரு மாதத்திலும் மின்சார சபை பெற்ற வருமானம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) எரிபொருள் சீராக்கல் கட்டணம் தற்போதும் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(vi) இன்றேல், அதனை அறவிடுதல் நிறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3773/ '13

கௌரவ விஜித பேருகொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையான காலப்பகுதியில் 'கமத்தொழில் உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் வழங்கல் செயற்பாடுகளின் போது அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதன் மூலம் கமத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தலை மேம்படுத்தல்' எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் யாதென்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) மக்களுக்கு இதன் மூலம் கிடைத்துள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தின் பொருட்டு தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டுள்ள சேவைகளும் பங்களிப்புகளும் யாவை என்பதையும்;

(ii) S.2KR 2010-2012 நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கருதப்படுவது யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 செத்தெம்பர் 04, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2613/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் பொல்பிதிகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹமடகல்ல வாவி எனும் பெயரில் உத்தேச நீர்ப்பாசன திட்டமொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நீர்ப்பாசன திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட தேதி யாதென்பதையும்;

(iii) இற்றைவரை இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2787/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திரு. சரத் பொன்சேகா எப்போது விடுதலை செய்யப்பட்டார் என்பதை இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மன்னிப்பு நிபந்தனையுடனா அல்லது நிபந்தனையின்றியா வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) திரு. சரத் பொன்சேகாவின் ஓய்வூதிய உரிமைகள் மற்றும் இராணுவப் பட்டங்கள் மீண்டும் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(iii) அவரை தற்போதும் 'ஜெனரல்' என அழைக்க முடியுமா என்பதையும்;

(iv) திரு. சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஏதாவது வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பதையும்;

(v) சனாதிபதியின் மன்னிப்பு மூலம் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்குகள் வெற்றாக்கப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) திரு. சரத் பொன்சேகாவுடன் வேலை செய்தமைக்காக அல்லது அவருக்கு உதவியமைக்காக, தொல்லை கொடுக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய அதிகாரிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டனரா அல்லது அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) திரு. சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில்,

(i) பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அழுத்தங்களைப் பிரயோகித்த நாடுகள் மற்றும் அவை எப்போது பிரயோகிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அரசியல் மற்றும் சமயத் தலைவர்களது இணக்கப்பாடுகள் ஏன் கவனத்திற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் கூறுவாரா

(உ) இன்றேல், ஏன்?

2934/ '12

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான சியம்பலாகொட (மேற்கு) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிங்கல்தெனிய, நியகமலஹேன உள்ளிட்ட வளம்மிக்க பல வயற் காணிகளை அழித்து வயலுக்குத் தேவையில்லாத கால்வாயொன்றும், வீதியொன்றும் அமைக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி கால்வாய் மற்றும் வீதி நிர்மாணிக்கப்படுதல் தொடர்பாக பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள் என்பதையும்;

(iii) இந்த நடவடிக்கை காரணமாக மழை குறைவான காலங்களில் வயல்கள் அழிவடையும் அச்சுறுத்தல் இருப்பதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கால்வாய் மற்றும் வீதியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெறப்படுகின்ற நிதியம் யாது என்பதையும்;

(iii) விவசாயிகள் நிராகரிக்கின்ற இக்கருத்திட்டத்தை நிறுத்திவிடுவதற்கும், முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3063/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குறைந்த விலைகளின் கீழ் 11 புகையிரத இயக்கவலுத் தொகுதிகளையும், 2 சொகுசு புகையிரதங்களையும் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளபோது, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பிரதித் தலைவர் பதவியை வகிக்கும் நிறுவனமொன்றுக்கு குறித்த போக்குவரத்து நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளமையால், புகையிரதத் திணைக்களத்திற்கு பெரும் நட்டத்தினை ஏற்க நேரிட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புகையிரத இயக்கவலுத் தொகுதிகளையும், சொகுசு புகையிரதங்களையும் போக்குவரத்தில் ஈடுபடுத்தும் கொடுக்கல் வாங்கல் காரணமாக புகையிரத திணைக்களத்துக்கு ஏற்க வேண்டி நேரிட்ட நட்டம் எவ்வளவு;

(ii) குறித்த நிதிசார் நட்டத்தை ஏற்படுத்தி, மோசடியான விதத்தில் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3072/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிழக்கு மாகாண சபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் I ஆவது நிரலின் (மாகாணசபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் III ஆவது நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3262/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகமம- ஹபரகட தாய்,சேய் சிகிச்சை நிலையத்தின் நவீனமயமாக்கல் பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மதிப்பீட்டுத் தொகையில், நவீனமயப்படுத்தல் பணிகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலையத்தை நவீனமயப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நவீனமயப்படுத்தல் பணிகளுக்கு முன்னர், மேற்படி தாய், சேய் சிகிச்சை நிலையத்தில் ஒரு மாதத்தினுள் நடத்தப்பட்ட தாய், சேய் சிகிச்சையளிப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அதன் நவீனமயப்படுத்தல் பணிகளின் பின்னர், இற்றைவரை ஒரு மாதத்தில் எத்தனை தாய், சேய் சிகிச்சையளிப்புகள் நடத்தப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3290/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொழும்பு மருதானைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அல் அதீஸ் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் டபிள்யு. எம். சுரேகா த சில்வா எனும் யுவதி வேலைவாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) அங்கு இவர் மரணமடைந்துள்ளார் என்பதையும்;

(iii) குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக போலி பொலிஸ் அறிக்கைகள் உள்ளிட்ட போலியான தகவல்களை சமர்ப்பித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) போலியான தகவல்களின் மீது மேலே குறிப்பிடப்பட்டுள்ள யுவதியை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக செயலாற்றிய மேற்படி நிறுவனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுரேகா த சில்வா என்பவர் மரணமடைந்ததற்கான காரணம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த காரணம் யாது;

(iii) மேற்படி மரணம் தொடர்பிலான மரண பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(iv) இறந்த யுவதியின் சார்பில் இவரது பெற்றோருக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3350/ '12

கௌரவ பி.ஹரிசன்,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3416/ '13

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு வாகரையைச் சேர்ந்த பூவேந்திரன் நிதார்சன் என்பவர் கைதுசெய்யப்பட்டு சிறையிலிடப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர் உள்ள சிறைச்சாலை எது என்பதையும்;

(iii) இவர் ஒரு சிறைக்கைதியாகவா அல்லது சந்தேக நபராகவா சிறையிலிடப் பட்டுள்ளார் என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, குறிப்பிட்ட நீதிமன்றம், வழக்கு இலக்கம், மற்றும் வழக்கின் தற்போதைய நிலமை யாதென்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பூவேந்திரன் நிதார்சன் என்பவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3683/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான கால கட்டத்தினுள் அமுலாக்கப்பட்ட நிலைபேறான கமத்தொழில் நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் I, II கட்டங்களின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நோக்கங்களை அடைவதற்காக இற்றைவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவார?

(ஆ) 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட பயிர்ச் செய்கை கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவை என்பதையும்;

(ii) இதற்கேற்ப எதிர்வரும் காலத்தில் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3699/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 பெப்ரவரி மாதத்தில் ஒரு மெட்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்ட சராசரி விலை (CIF VALUE);

(ii) மெட்றிக் தொன் ஒன்றில் அண்ணளவாக அடங்கும் பெற்றோல் லீற்றர்களின் எண்ணிக்கை;

(iii) இதற்கமைய, 2013 பெப்ரவரி மாதத்தில் துறைமுகத்திலிருந்து இறக்குகையில் நிலவிய ஒரு லீற்றர் பெற்றோலின் சராசரி விலை;

(iv) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கம் அறவிடும் ஒவ்வொரு வரியினதும் அளவுகள்;

(v) ஒரு லீற்றர் பெற்றோலிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெறுகின்ற இலாபம்;

(vi) ஒரு லீற்றர் பெற்றோலை விநியோகிப்பதற்கான செலவு மற்றும் விற்பனையின் மூலம் எரிபொருள் நிரப்பும் நிலையம் பெறும் இலாபம்;

எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3866/ '13

கௌரவ மனுஷ நாணாயக்கார,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குப் பயிர்ச் செய்கைக்கு அழிவை ஏற்படுத்தும் 'மயிட்டா' நோயை முழுமையாக ஒழிப்பதற்காக அல்லது குறைப்பதற்காக அமைச்சினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளின் ஊடாக நற்பயன்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகள் தோல்வியடைந்திருப்பின், எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள உத்தேச நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3867/ '13

கௌரவ கனக ஹேரத்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தெங்குப் பயிர்ச் செய்கை சபை, இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் ஆகிய நிறுவனங்களுக்கு சொந்தமான நாற்று மேடைகளில் வளர்க்கப்படும் தென்னங் கன்றுகள் பொது மக்களை சென்றடைவதற்கான முறையியல் யாதென்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தென்னங் கன்றுகளை மக்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் வேறொரு நிறுவனம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுமாயின், அந்நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அண்மித்த 05 வருட காலத்தில் மேற்படி ஒவ்வொரு நிறுவனம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3870/ '13

கௌரவ செஹான் சேமசிங்ஹ,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் கருத்திட்டமொன்றான 'கப்ருக்க புரவர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நாற்றுமேடைகளுக்கான விதைத் தேங்காய்களைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு என்பதையும்;

(ii) விதைத் தேங்காய்களைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட தென்னை மரங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி மரங்களை இனங்காண்பதற்கு செயற்பட்டவர்கள் யாவர் என்பதையும்;

(iv) இதுவரை இனங்காணப்பட்டுள்ள விதைத் தேங்காய்களை பெற்றுக் கொள்ளும் மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) 'கப்ருக்க புரவர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள தெங்கு நாற்று மேடைகளில் இதுவரை நடப்பட்டுள்ள விதைத் தேங்காய்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு விதைத் தேங்காய் நாற்றுமேடையும் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி நாற்றுமேடைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பயிர்ச் செய்கைக்கு தகுந்த நிலையில் காணப்படுகின்ற தென்னங் கன்றுகள் தொடர்பாக மேற்கொள்ளும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3917/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களில் ஒரு பர்சஸ் காணியேனும் உரித்தானதாக உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படுகின்ற அரசாங்கத்திற்கு உரித்தான மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காணிகளில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) வெளிஇடங்களிலிருந்து இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவுக்கு வருகை தந்துள்ளவர்களுக்கு இப்பிரதேசத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள அரசாங்கக் காணிகளின் அல்லது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 செத்தெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2614/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹக்வட்டுனாவ எனும் பெயரில் நீர்ப்பாசன திட்டமொன்று உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஹக்வட்டுனாவ நீர்ப்பாசன திட்டத்தின் கீழ்,

(i) எத்தனை ஏக்கர் நெற்காணி பயிர்செய்கை செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) பயன்பெறும் விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சிறு போகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு இயலாதிருப்பின், அவ்வாறு செய்வதற்கு இயலுமானவாறு ஹக்வட்டுனாவ நீர்ப்பாசன திட்டத்தை விருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2897/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. லசந்த விக்கிரமதுங்க எப்போது கொல்லப்பட்டார் என்பதையும்;

(ii) மேற்படி கொலை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த குற்றவியல் விசாரணைப் பிரிவு (சீ.ஐ.டி.) எது என்பதையும்;

(iii) சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து இவ்விடயத்திற்குப் பொறுப்பாக்கப்பட்ட உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iv) இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி கொலைச் சம்பவத்தின் விசாரணையில் ஒரு வகை அசட்டை காட்டப்படுகிறதா என்பதையும்;

(ii) ஏதாவது காரணத்திற்காக இக்கொலைச் சம்பவத்தை மூடி மறைக்க அரசாங்கம் விரும்புகிறதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2989/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான பானம சாஸ்த்ரவெல பிரதேசத்தில் 1220 ஏக்கர் அளவினதான காடுகளும் விவசாய நிலங்களும் கடற்படையினராலும் விசேட அதிரடிப் படையினராலும் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பில் 'ரணவிரு' கிராமமொன்றையும் கடற்படை முகாமொன்றையும் ஹோட்டல் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்பில் அமைந்துள்ள பெலும்காராராம விகாரை உள்ளிட்ட மேலும்பல தொல்பொருளியல் சார்ந்த இடங்களுக்குப் பிரவேசிப்பது மக்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ள தென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் பிரதேசத்தின் மக்கள் வாழ்க்கைக்கும் இயற்கைச் சூழலுக்கும் தீவிர தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட காணிகளை சுவீகரிப்பதற்காக சட்டபூர்வ அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்படுவதால் காணிகளையும் ஆதனங்களையும் இழக்கின்ற மக்களுக்கு மீண்டும் காணிகளை அல்லது நட்டஈட்டினை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2997/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக வழக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வழக்குகளில் தற்போது விசாரணை மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் விசாரணை முடிவடைந்துள்ளவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை விசாரணைக்கு எடுக்கப்பட்ட சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டணை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச தண்டனை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3061/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஹொறனை, மத்துகமை மற்றும் களுத்துறை ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அனேக பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகள் நிதியின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்தில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணிப்புக்காக அரசாங்கம் ஒதுக்கிய நிதிக்கு என்ன நடைபெற்றது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் தேவையான நிதித்தொகை யாது;

(iv) உரிய நிதி ஏற்பாடுகளை விரைவில் ஒதுக்கீடு செய்து, குறித்த பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3351/ '12

கௌரவ பி.ஹரிசன்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3686/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குவைட் நாட்டிற்கு தொழில்வாய்ப்புக்காகச் சென்றுள்ள இலங்கைப் பெண்கள் 300 பேருக்கும் அதிகமானவர்கள் அங்கு அவர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ள பல்வேறு தொல்லைகள், கஷ்டங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக சேவை நிலையங்களிலிருந்து தப்பிச் சென்றுள்ளதனால் வேறு எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறு கஷ்டங்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கை ஊழியர்களின் கஷ்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக குவைட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அலுவலர்களிடமிருந்து மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான முறையான, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தற்போது குவைட் நாட்டில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை துரிதமாக இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3775/ '13

கௌரவ விஜித பேருகொட,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அவசரகால சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இணைப்பதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டு மாகாணங்களாக மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி மாகாணங்களை பிரித்தலானது, உயர்நீதிமன்ற வழங்குத் தீர்ப்பொன்றுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) இன்றேல், அவ்வாறான வழங்குத் தீர்ப்பொன்று வழங்கப்படுவதற்கு முன்னதாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2615/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் தொரட்டியாவ முதல் கோன்பல வரையிலான பாதை மிக மோசமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக இப் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாதையை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் தேதி யாதென்பதையும்;

(ii) அதற்கு செலவாகும் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இப் பாதையை திருத்தியமைக்கும் கருத்திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் தேதி யாதென்பதையும்;

(iv) இப் பாதையைத் திருத்தியமைப்பதைப் பூர்த்திசெய்து மக்களுக்கு கையளிக்கும் தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2937/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தொகை மதிப்பீட்டுக்கான மொத்தச் செலவையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொகை மதிப்பீட்டின் போது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iii) சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் மற்றும் ஏனையோர் என்ற இன அடிப்படையில் நாட்டின் சனத்தொகையையும்;

(iv) பௌத்தம், கிறிஸ்தவம் (அனைத்துப் பிரிவுகளும்), இந்து, இஸ்லாம் என்ற மத அடிப்படையில் நாட்டின் சனத்தொகையையும்

(v) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) குடிசனத்தொகை மதிப்பீட்டுத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான கொள்வனவு விலைமனுக் கோரல் தொடர்பில்,

(i) விலைமனுவினைப் பெற்றுக்கொண்டவரையும்;

(ii) ஒவ்வொரு வினைமனுவிற்கும் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள், தொகை போன்றவற்றை வெவ்வேறாகவும்;

(iii) விலைமனுக் கோரல் சபைக்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2990/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தின் கித்துள்கல களணிவெளி ஒதுக்கத்திற்கு சொந்தமான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற மாகன்தூவ ஒதுக்கத்திற்கு குறுக்காக கித்துள்கலவில் இருந்து பள்ளேபாகே வரை வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி வீதி நிர்மாணிக்கப்படுவதால் கடுமையான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதாக சுற்றாடலியலாளர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள் என்பதையும்;

(iii) ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தை தடுப்பதற்காக மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாகன்தூவ ஒதுக்கத்திற்கு குறுக்காக மேலே குறிப்பிட்ட வீதியை நிர்மாணிக்க சட்டபூர்வமான அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தையும் அதனோடு சம்பந்தப்பட்ட மக்கள் எதிர்ப்பையும் கருத்திற்கொண்டு மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3254/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அண்மையில் மடிக் கணினிகள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஊடகவியலாளர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மடிக் கணனிகளை வழங்குவதற்காக ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி கணனியொன்றின் விலை எவ்வளவு என்பதையும்;

(v) இற்றைவரை வழங்கப்பட்டுள்ள மடிக் கணனிகளுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3267/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையிடமிருந்து கொழும்பு மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள மொத்த நிலுவை வரிப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்காக மேற்படி நகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வரிப் பணத் தொகையின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3352/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2616/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் வெல்லவ, ஹதிரவலான ஊடாக புதுனாப்பிட்டிய வரை செல்கின்ற பாதை பெருமளவு சிதைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக பெருமளவிலான பிரதேசவாசிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாதையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) இதற்காகச் செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பாதையை திருத்துவதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்,

(iv) இப்பாதையின் திருத்தத்தைப் பூர்த்தி செய்து மக்களுக்கு ஒப்படைக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 செத்தெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2546/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2009ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை இலங்கை இராணுவத்திற்கு, விமானப் படைக்கு மற்றும் கடற்படைக்கு உணவு வழங்கலை மேற்கொள்கின்ற ஆட்களும் நிறுவனங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களையும் நிறுவனங்களையும் தெரிவு செய்கையில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஆட்களும் நிறுவனங்களும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(v) தெரிவுசெய்யப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2617/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர் வழங்கள், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மாவட்ட மட்டத்தில் கருத்திட்டங்கள் நடைமுறைபடுத்தப் படுகின்றனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை, தெவிநுவர பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் தெவ்சிறிகம கிராமத்தில் சுமார் நாற்பது குடும்பங்களுக்கு கடும் குடிநீர்ப் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கிராம மக்களின் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக குழாய் நீர்க் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2942/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியையும்;

(ii) சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு மாற்றப்பட்ட பணத்தொகைகளையும்;

(iii) உண்மையில் சமுர்த்திக்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iv) மேற்படி உண்மையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தலைப்புக்களையும்;

(v) சமுர்த்திப் பயனாளிகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் மாற்றப்பட்டுள்ள செலவினத்தலைப்புகள் ஆகியவற்றை மாதாந்த அடிப்படையிலும்;

(vi) சமுர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளை வருட வாரியாகவும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2991/ '12

கௌரவ புத்திக பதிரண,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 மே மாதம் தொடக்கம் 2012 மே மாதம் வரை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவி வகித்தவரின் கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) இவருக்கு இப்பதவிக்காக மாதாந்தம் வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர் இரு வீட்டுப் பணியாளர்களை பணிக்கமர்த்தியுள்ளதாக போலியான தகவல்களை முன்வைத்து கூட்டுத்தாபன நிதியிலிருந்து மாதாந்தம் ரூபா 35,000 தொகையைப் பெற்றுக்கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஓபல்கல தோட்டத்தில் 250 ஏக்கர் அளவிலான செழிப்பான ஏலம் பயிர்ச்செய்கைக் காணி எதுவித பகிரங்க அறிவித்தலும் இன்றி "சசிகி" எனும் தனியார் கம்பனிக்கு வழங்கப்படுள்ளது என்பதையும்;

(ii) அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 32 - 606 மற்றும் 32 - 611 இலக்கங்கள் கொண்ட இரண்டு ஜீப் வண்டிகள் தலைவரினால் இரகசியமாக விற்பனை செய்யப்பட்டுள்ளதென ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) மேலே (ஆ)(ii)இல் குறிப்பிடப்பட்ட வாகனங்கள் விற்கப்பட்டிருப்பின் அவற்றைக் கொள்வனவு செய்தோரின் பெயர், முகவரிகள் மற்றும் விற்பனை விலை யாவையென அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3268/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்தோறும் "சேவை இல்லம்" அலுவலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) "சேவை இல்லம்" அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத்தொகை யாது;

(iv) முதலாவது "சேவை இல்லம்" அலுவலகம் நிர்மாணிக்கப்படுவது எப்போது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3353/ '12

கௌரவ பி. ஹரிசன்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2618/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதமஅமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற தொழிலின்மை வீதம் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தொழிலின்மைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தீர்வுகள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள எடுக்கும் காலம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2944/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் ஆயுதங்களுக்கும் வெடிமருந்துகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் ஆயுதங்களுக்கும் வெடிமருந்துகளுக்கும் செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) ஆயுதங்களுக்கும் வெடிமருந்துகளுக்கும் மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் ஆயுதங்களுக்கும் வெடிமருந்துகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2992/ '12

கௌரவ புத்திக பதிரண,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வியாபார நிருவாக பட்டப்படிப்புக்கென பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு நான்கு மாணவர் குழுக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனரென்பதையும்;

(ii) இம் மாணவர்களுக்கென புறம்பான முகாமைத்துவ பீடமொன்று இதுவரை நிருவப்படவில்லை என்பதையும்;

(iii) இப்பட்டத்துக்காக சேர்த்துக்கொள்ளப்படும் தொகை 2012 ஆம் வருடத்தில் 50 மாணவர்கள் வரை குறைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பேராதனை பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்துக்காக தனியான ஒரு கட்டிடம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருருகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்கட்டிடத்தின் வேலைகளைத் துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3354/ '12

கௌரவ பி. ஹரிசன்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3621/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சர்வதேச விளையாட்டுமைதானமொன்றான மொரட்டுவ த சொய்ஸா விளையாட்டு அரங்கில் இறுதியாக சர்வதேச விளையாட்டுப் போட்டியொன்று நடத்தப்பட்ட வருடம் மற்றும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டரங்கு சிதைவடையும் நிலைமைக்கு உள்ளாவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அதன் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ள தரப்பு யாதென்பதையும்;

(iii) அதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனம் அல்லது தரப்பு யாதென்பதையும்;

(v) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2945/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் அனர்த்த முகாமைத்துவத்திற்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) அனர்த்த முகாமைத்துவத்திற்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3011/ '12

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் திணைக்களத்தினால் நீண்ட காலமாக நடாத்தப்பட்டு வந்த தந்திச்சேவையை (ரெலிகிராம்) இல்லாமற் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றதா என்பதையும்;

(ii) இச்சேவையை இல்லாமற்செய்வதற்கான நோக்கம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இச்சேவை இல்லாமலாக்கப்பட்டால், இதன் மூலம் சேவையைப் பெறுகின்ற பொது மக்களும் அரச மற்றும் தனியார் ஊழியர்களும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(ii) தந்திச் சேவையை இல்லாமற்செய்வதைத் தொடர்ந்து இச்சேவையில் ஈடுபட்டிருப்பவர்களின் தொழிற் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை எழுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின் இவர்களின் தொழிலைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3355/ '12

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4173/ ’13

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியானது, நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் வருகின்ற ஒரு நியதிச்சட்ட நிறுவனமா என்பதையும்;

(ii) இன்றேல், இது அமைச்சின் பொறுப்பில் இல்லாத சுயாதீனமான ஒரு நிறுவனமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை மத்திய வங்கியின்,

(i) பிரதம கணக்கீட்டு அலுவலர் யார் என்பதையும்;

(ii) நாணயச் சபையின் கடமைகள் யாவை என்பதையும்;

(iii) முகாமைத்துவ மற்றும் நிருவாக தீர்மானங்களின் இறுதி அதிகாரி யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை மத்திய வங்கிக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றும், சம்பளக் கட்டமைப்பொன்றும் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை அங்கீகரித்துள்ள அதிகாரி யார் என்பதையும்;

(iii) அதற்கு தேசிய சம்பளங்கள், ஆளணியினர் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கை மத்திய வங்கியின் பணியாட்டொகுதியின் சம்பள மீள்திருத்த முறை மற்றும் அதற்காகப் பயன்படுத்துகின்ற தகவுதிறன்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி (இ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பளக் கட்டமைப்பை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.194/ ’13

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் திருத்தம்,— நிலையியற் கட்டளை 134 இன் பிரகாரம் கீழ்க்காணும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்தமானது நிலையியற் கட்டளைகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாகவென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது,—

1.

32 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையை உடனடுத்து பின்வருவனவற்றை சேர்க்கவும் —

“( 3 ) ஒழுங்குப் பத்திரத்தில் வினாக்கள் சேர்க்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அமைச்சர்கள் அவற்றுக்கான விடைகளை வழங்குதல் வேண்டும். உரிய தினத்தில் விடையளிக்க முடியாதவிடத்து , ஒரு மாத காலம் வரை பின்போடுவதற்கு அமைச்சர் வேண்டுகோள் விடுக்கலாம். வினாவை எழுப்பிய இரண்டாவது சந்தர்ப்பத்திலும் விடை கிடைக்காத சூழ்நிலையில் சபாநாயகர் இத்தகவலை எழுத்து மூலமாக நிறைவேற்றுக் கிளையின் தலைவருக்கு அறிவிப்பதுடன் அக்கடிதம் கிடைத்து இரண்டு வாரங்களுக்குள் விடையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டும்”

2.

நிலையியற் கட்டளை இல.45 ஆனது, நிலையியற் கட்டளை இல. 45( 1 ) ஆக மீள் இலக்கமிடப்படல் வேண்டும்.

1 ஆம் பந்தியில், ‘அத்தகைய திகதியில்’ என்பதைத் தொடர்ந்து ‘அது சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு நாட்களுக்கு முற்படாத ஒரு திகதி’ என் சொற்கள் சேர்க்கப்படுமாக, அத்துடன் பின்வரும் புதிய பந்தியும் சேர்க்கப்படுமாக:

நிலையியற் கட்டளை 45(1) இற்கு உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்க்கவும் —

“(2) எல்லா சட்டமூலங்களும் சட்டப் பயன் பற்றிய கூற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

எனினும், விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ள எந்த விதமான விடயுமும் பாராளுமன்ற அலுவல்கள் இடம்பெறும் மூன்று மொழிகளிலும் உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இல்லாத பட்சத்தில் எந்தவொரு சட்டமூலமும் பரிசீலனைக்கு எடுக்கப்படலாகாது. இதனை உறுதி செய்வது செயலாளர் நாயகத்தின் கடமையாகும். அத்துடன் அதற்கிணங்க சட்டமூலம் விவாதத்திற்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் செயலாளர் நாயகம் கௌரவ சபாநாயகருக்கு அறிக்கையிடுவார்”

45(2) ஆம் நிலையியற் கட்டளையை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துக:—

(3) சட்டமூலமானது “(ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த) முதன் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் குறிப்பிட்டதொரு காலத்தினுள் அறிக்கையிடுவதற்காக உரிய ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

3.

நிலையியற் கட்டளை இல. 53 இன் இறுதியில் பின்வருவனவற்றை உட்புகுத்துக:—

‘குழுநிலையில் சட்டமூலத்தை பரிசீலனை செய்வதற்கு குறைந்த பட்சம் இரண்டு நாட்களாவது கொடுக்கப்பட்டால் குறித்துரைத்த திகதியொன்றில் அறிக்கையிடுவதற்கு குழுவிற்கு ஆணையிடப்படலாம். அத்தகைய பரிசீலனையின் பின்னர் மட்டுமே சட்டமூலத்தின் மூன்றாம் மதிப்பீடு இடம்பெற வேண்டும்’

4.

78 அ (2) நிலையியற் கட்டளையை நீக்கி பின்வருவனவற்றை பதிலீடு செய்தல்:—

“(2) இச்கட்டளையின் ( 1 ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தீர்மானமொன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுகின்ற விடத்து, அத்தகைய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான நடத்தை அல்லது திறமையீனம் பற்றிய குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொண்டு அதன் பெறுபேற்றை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக மூன்று உறுப்பினர்களை கூட்ட நடப்பெண்ணாகக் கொண்ட ஏழுக்குக் குறையாத உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிகுழுவொன்றை சபாநாயகர் நியமித்தல் வேண்டும். அத்தகைய விசாரணையொன்று ஓய்வுபெற்ற நீதிபதியொருவரினால் அல்லது அதற்கு மேற்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதிகளை உள்ளடக்கிய நியாயச் சபையால் நடாத்தப்படுத்ல் வேண்டும். அத்தகைய நியாயச் சபையின் முன் விடயத்தையும் சாட்சிகளையும் சமர்ப்பிப்பதற்கு நபரொருவரை தெரிகுழு நியமிக்கலாம்”

பந்தி (3) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க:—

“(3) சார்த்துரை செய்யப்பட்ட நீதிபதியின் துர்நடத்தை அல்லது இயலாமை ஆகியவை அதன் புலனாய்வு வியடமாக இருக்கும் போது அத்தகைய நீதிபதிக்கு எதிராக, மேற்கொள்ளப்பட்ட துர்நடத்தையின் சார்த்துரைகள் அல்லது இயலாமை ஆகியவற்றின் பிரதி, மற்றும் அத்தகைய தெரிகுழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஆகியவற்றை அத்தகைய நியாய சபை குறித்த நீதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன், அதனால் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய கால எல்லையினுள் மறுத்துரைக்கும் எழுத்து மூலமான கூற்றை வழங்குமாறு அந்த நீதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கவும் வேண்டும்”

பந்திகள் (4) மற்றும் (5) ஆகியவற்றை நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க:—

“(4) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும் அதேவேளை, துர்நடத்தை அல்லது இயலாமை பற்றி சாத்துரை மேற்கொள்ளப்பட்டு அது விசாரணை விடயமாக உள்ள நீதிபதிக்கெதிரான வழக்கு ஆரம்பிக்கப்பட்டதும் தனிப்பட்ட முறையில் அல்லது தனது பிரதிநிதி ஊடாக அதன் முன்னிலையில் தோன்றி விசாரிக்கப்படுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட சார்த்துதல்களுக்கு எதிராக சாட்சியங்களின் சான்றுகளை மெய்யுறுதிப்படுத்துவதற்கும் வாய்மூல அல்லது ஆவண சான்றுகளை சமர்ப்பிப்பதற்குமான உரிமையை அனுமதிப்பதற்கும் நியாய சபை தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்”

பந்தி (6) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க:—

“(5) நியாய சபை விசாரணையின் முடிவில் அதன் கண்டுபிடிப்புகளை, தெரிகுழுவிற்கு அறிக்கையிட வேண்டும் என்பதுடன், தெரிகுழு அத்தகைய கண்டுபிடிப்புகளைப் பற்றி கலந்தாராய்ந்து மேற்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அறிக்கையுடன் அமர்வுகள் ஆரம்பித்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்குப் பொருத்தமானது என குழு நினைக்கும் ஏதேனும் விடயங்கள் பற்றிய விசேட அறிக்கை ஒன்றைக் குழு சமர்ப்பிக்க முடியும்;

எனினும், இத்தால் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள், தெரிகுழுவினால் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட முடியாமல் போயின், அதற்கான காரணத்தை விளக்கி, மேலும் குறித்துரைக்கப்பட்டதொரு கால எல்லையின் நீடிப்பிற்காக பாராளுமன்றத்தின் அனுமதியை தெரிகுழு பெற வேண்டும். பாராளுமன்றம் அவசியமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய கால எல்லை நீடிப்பைப் பாராளுமன்றம் அனுமதிக்கலாம்"

பந்தி (7) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க:—

"(6) நியாய சபை அறிக்கையின் பரிசீலனை மற்றும் தெரிகுழுவின் விதப்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து துர்நடத்தை அல்லது இயலாமை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் நீதிபதியை பதவியிலிருந்து அகற்றுவதற்கு சனாதிபதிக்கு விடுக்கும் கோரிக்கை பற்றிய தீர்மானத்தின் மீது பாராளுமன்றம் வாக்கெடுப்பை நடாத்தலாம். அத்தகையதொரு தீர்மானம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றபடின், பாராளுமன்றம் சார்பாக, சபாநாயகர் அத்தகைய கோரிக்கையை சனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும்"

5.

78 ஆ (2) நிலையியற் கட்டளையை நீக்கி பின்வருவனவற்றை பதிலீடு செய்க:—

"(2) இச்கட்டளையின் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தீர்மானமொன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுகின்ற விடத்து அத்தகைய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான நடத்தை அல்லது திறமையீனம் பற்றிய குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொண்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக மூன்று உறுப்பினர்களைக் கூட்ட நடப்பெண்ணாகக் கொண்ட ஏழுக்குக் குறையாத உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிகுழுவொன்றை சபாநாயகர் நியமித்தல் வேண்டும். அத்தகைய விசாரணையொன்று ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவரால் அல்லது அதற்கு மேற்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதிகளை உள்ளடக்கிய நியாயச் சபையால் நடாத்தப்படுத்ல் வேண்டும். அத்தகைய நியாயச் சபையின் முன் விடயத்தையும் சாட்சிகளையும் சமர்ப்பிப்பதற்கு நபரொருவரை தெரிகுழு நியமிக்கலாம்"

பந்தி (3) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றை பதிலீடு செய்க:—

"(3) சார்த்துரை செய்யப்பட்ட இக்கட்டளையின் ( 1 ) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் துர்நடத்தை அல்லது இயலாமை ஆகியவை அதன் புலனாய்வு வியடமாக இருக்கும் போது அத்தகைய நீதிபதிக்கு எதிராக, மேற்கொள்ளப்பட்ட துர்நடத்தையின் சார்த்துரைகள் அல்லது இயலாமை ஆகியவற்றின் பிரதி, மற்றும் அத்தகைய தெரிகுழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஆகியவற்றை அத்தகைய நியாய சபை குறித்த நீதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன், அதனால் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய கால எல்லையினுள் மறுத்துரைக்கும் எழுத்து மூலமான கூற்றை வழங்குமாறு அந்த ஆளுக்கு வேண்டுகோள் விடுக்கவும் வேண்டும்"

பந்தி (4) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றை பதிலீடு செய்க:—

"(4) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும் அதேவேளை, துர்நடத்தை அல்லது இயலாமை பற்றி சாத்துரை மேற்கொள்ளப்பட்டு அது விசாரணை விடயமாக உள்ள ஆளுக்கெதிரான வழக்கு ஆரம்பிக்கப்பட்டதும் தனிப்பட்ட முறையில் அல்லது தனது பிரதிநிதி ஊடாக அதன் முன்னிலையில் தோன்றி விசாரிக்கப்படுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட சார்த்துதல்களுக்கு எதிராக சாட்சியங்களின் சான்றுகளை மெய்யுறுதிப்படுத்துவதற்கும் வாய்மூல அல்லது ஆவண சான்றுகளை சமர்ப்பிப்பதற்குமான உரிமையை அனுமதிப்பதற்கும் நியாய சபை தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்"

பந்தி (5) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க:—

"(5) நியாய சபை விசாரணையின் முடிவில் அதன் கண்டுபிடிப்புகளை, தெரிகுழுவிற்கு அறிக்கையிட வேண்டும் என்பதுடன், தெரிகுழு அத்தகைய கண்டுபிடிப்புகளைப் பற்றி கலந்தாராய்ந்து மேற்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அறிக்கையுடன் அமர்வுகள் ஆரம்பித்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்குப் பொருத்தமானது என குழு நினைக்கும் ஏதேனும் விடயங்கள் பற்றிய விசேட அறிக்கை ஒன்றைக் குழு சமர்ப்பிக்க முடியும்;

எனினும், இத்தால் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள், தெரிகுழுவினால் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட முடியாமல் போயின், அதற்கான காரணத்தை விளக்கி, மேலும் குறித்துரைக்கப்பட்டதொரு கால எல்லையின் நீடிப்பிற்காக பாராளுமன்றத்தின் அனுமதியை தெரிகுழு பெற வேண்டும். பாராளுமன்றம் அவசியமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய கால எல்லை நீடிப்பைப் பாராளுமன்றம் அனுமதிக்கலாம்"

பந்தி (6) ஐ நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க:—

"(6) நியாய சபை அறிக்கையின் பரிசீலனை மற்றும் தெரிகுழுவின் விதப்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து துர்நடத்தை அல்லது இயலாமை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அத்தகைய ஆளை பதவியிலிருந்து அகற்றுவதற்கு சனாதிபதிக்கு விடுக்கும் கோரிக்கை பற்றிய தீர்மானத்தின் மீது பாராளுமன்றம் வாக்கெடுப்பை நடாத்தலாம். அத்தகையதொரு தீர்மானம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றபடின், பாராளுமன்றம் சார்பாக, சபாநாயகர் அத்தகைய கோரிக்கையை சனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும்"

6.

104 முதல் 115 வரையான பகுதிகளை நீக்கி அதற்குப் பதிலாக பின்வருவனவற்றினைக் கொண்டு பதிலீடு செய்யவும் :—

104 ஆலோசனைக் குழுக்கள்,

அரசாங்கத்தின் குறிப்பிட்ட செயற்பாடுகளைக் கொண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்காக பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படலாம். சட்டமூலங்கள், சட்டவாக்கத்திற்கான முன்மொழிவுகள், குறைநிரப்பு அல்லது வேறு மதிப்பீடுகள், செலவுக் கூற்றுக்கள், பிரேரணைகள், வருடாந்த அறிக்கைகள் அல்லது பத்திரங்கள் ஆகியவை தொடர்பாக அமைச்சுக்களுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் பற்றி விசாரித்து அறிக்கையிடுவது அவற்றின் கடமையாகும். அமைச்சர்களினால் நேரங்குறித்தொதுக்கப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் அவ்வாறான நேரத்தில் உறுப்பினர்களும் அவர்களின் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்களும் கையாளுகின்றதான குறிப்பிட்ட கரிசனைகளுடன் தொடர்புடைய விடயங்களை குழுக்கள் பரிசீலிக்கமாட்டாது. பொறுப்பான அமைச்சருடன் ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து ஆலோசனைக் குழுவொன்று எந்தவொரு சட்டமூலத்தை அல்லது பிரேரணையை முன்னெடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

105

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு போதிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்களின் எண்ணிக்கையினை ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தின் போதும் தெரிவுக் குழுவானது தீர்மானித்து அவ்வாறான குழுக்களை நியமிக்கலாம்.

குறிப்பாக, பின்வரும் விடயப் பரப்புகளை உள்ளடக்குவதற்கு அது குழுக்களை நியமிக்கும். இப் பரப்புகளுக்குப் பொறுப்பான சகல அமைச்சுக்களுடனும் தொடர்புடைய விடயங்களை குழுக்கள் கலந்துரையாடும்.

1. பாதுகாப்பு
2. வெளிநாட்டலுவல்கள்
3. பொருளாதார அபிவிருத்தி
4. கல்வி, மனித வள அபிவிருத்தி
5. பொது நிர்வாகம், உள்ளூராட்சி
6. நீதி
7. நிதி
8. சுகாதாரம்
9. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்
10. சுற்றாடல், அனர்த்த முகாமைத்துவம்
11. நீர்ப்பாசனம், நீர் முகாமைத்துவம்
12. விவசாயம், கடற்றொழில், கால்நடை அபிவிருத்தி
13. கைத்தொழில்
14. மனித உரிமைகள், மீளிணக்கம்
15. விமானச் சேவைகள், கப்பற்சேவைகள்
16. எரிசக்தி, பெற்றோலியம், கனிய வளங்கள்
17. தொல் பொருளியல், பாரம்பரிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள்
18. வெகுசன ஊடகம்
19. தபால், தொலைத்தொடர்புகள்
20. தொழில்
21. வர்த்தகம், கூட்டுறவுகள்
22. காணி, நகர அபிவிருத்தி

தெரிவுக்குழுவானது ஏனைய ஆலோசனைக் குழுக்களை நியமிக்கவும் அவ்வாறான குழுக்களின் அறிக்கைகளை வருடாந்தம் மீளாய்வு செய்து அவ்வாறான குழுக்களின் ஆக்க அமைவினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறு மாற்றங்களை ஏற்படுத்தல் வேண்டும்.

106

ஒவ்வொரு ஆலோசனைக் குழுவினதும் விடயங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் அல்லது அமைச்சர்களின் ஆலோசனையுடன் தெரிகுழுவானது ஒவ்வொரு ஆலோசனைக் குழுவினதும் தவிசாளரினை நியமிக்க வேண்டும். ஆலோசனைக் குழுக்களின் தலைவர்கள் அமைச்சர்களாகவோ அல்லது பிரதி அமைச்சர்களாகவோ இருத்தல் ஆகாது. இவ்வாறான குழுக்களின் தலைவர்களில் குறைந்தது அரைவாசிப் பேர் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். ஆலோசனைக் குழுக்களின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினார்களைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்ட நடப்பெண் இல்லாத பட்சத்திலும், கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட முடியுமாயினும் கூட்ட நடப்பெண் உள்ள குழுக்கூட்டமொன்றில் அனுமதிக்கப்பட்டாலன்றி அவ்வாறான கலந்துரையாடல் குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கையின் ஒரு பகுதியாக இருத்தலாகாது.

107

ஒவ்வொரு ஆலோசனைக் குழுவும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் ஐந்துக்கும் குறையாததும் பதினைந்திற்கு மேற்படாததுமான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எந்தவொரு உறுப்பினரும் மூன்றுக்கு மேற்பட்ட ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறலாகாது. ( கீழே வாசகம் 108 இன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் நோக்கம் நீங்கலாக) இருப்பினும், எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் அவர் உறுப்பினராக இல்லாத ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். ஆனால், தவிசாளரினால் வேண்டப்படும் பட்சத்தில் அதிலிருந்து வெளியேற வேண்டும்.

108

ஒவ்வொரு ஆலோசனைக் குழுவும் பாராளுமன்றத்திலுள்ள ஒவ்வொரு கட்சியினையும் சேர்ந்த குறைந்தது ஓர் உறுப்பினரையாவது கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இயலுமானளவிற்கு பாராளுமன்றத்தின் கட்சி ஆக்கவமைப்பினைப் பிரதிபலித்தல் வேண்டும். உறுப்பினர்களின் விருப்பத்திற்கமைய தெரிவுக் குழுவானது ஆலோசனைக் குழுவிற்கு நியமனங்களை மேற்கொள்ள வேண்டும். உறுப்பினர்கள் ஐந்து குழுக்கள் வரையில் சேவையாற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

109

ஒவ்வொரு குழுவும் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையாவது கூட வேண்டும். குழுவின் உப குழுக்களின் ஊடாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை கலந்துரையாடுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அல்லது அமைச்சர்களினால் வாய்ப்பும் வழங்கப்படல் வேண்டும். இவ்வாறான கலந்துரையாடல்கள் அமைச்சில் இடம்பெறல் வேண்டும். மேலும் தவிசாளர் இந்த நோக்கத்திற்காக ஒரு உப குழுவினை பெயர் குறித்து நியமிக்கலாம். ஆலோசனைக் குழுவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சகல கட்சிகளும் பங்கு பற்றுதல் வேண்டும்.

110

சட்ட மூலங்கள் முன்மொழியப்படுகின்ற விடயங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற அமைச்சர்கள் அவ்வாறான சகல சட்ட மூலங்களையும் சம்பந்தப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிசீலிப்பிற்காக சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் அவர் அவ்வாறான கூட்ட மூலங்களைப் பற்றிய கலந்துரையாடலுக்கான விசேட கூட்டங்களுக்கு தலைமை தாங்க வேண்டும்.

111

ஆலோசனைக் குழு உறுப்பினர் ஒருவர் இறக்கும் போது, இராஜினாமாச் செய்கையில் அல்லது அவரின் உறுப்பாண்மை வெற்றிடமாகையில் ஆலோசனைக் குழுவின் அவ்வாறான உறுப்பினரின் இடத்திற்கு மற்றுமொரு உறுப்பினரை தெரிவுக்குழுவானது காலத்திற்குக் காலம் நியமிக்கலாம். எந்தவொரு ஆலோசனைக் குழுவினதும் எந்தவொரு உறுப்பினரை அகற்றுவது அவசியம் எனக் கருதுகையில் அவரை அகற்றி அவரின் இடத்திற்கு வேறொருவரை நியமிப்பதற்கான உரிமையினைத் தெரிவுக்குழு கொண்டுள்ளது. இக்கட்டளையின் கீழான ஒவ்வொரு நியமனமும் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

112

தனது கைப்பட எழுதப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் குழுக்கூட்டங்களில் கலந்துகொள்ளாமலிருப்பதற்கான முன் அனுமதியைப் பெறாது எந்தவொரு உறுப்பினரும் குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வராமலிருக்கையில் அவர் அந்த ஆலோசனைக் குழுவில் தனது உறுப்பாண்மையினை வறிதாக்கிவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். தெரிவுக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலன்றி, அதே காலத்தில் அக்குழுவிற்கு அவர் மீண்டும் நியமிக்கப்படலாகாது;

ஆயினும், பாராளுமன்றத்தின் அனுமதியுடன் உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளாமல் இருக்கும் அதேகாலப்பகுதியில் அவ்வாறான குழுவின் ஏதாவது கூட்டங்கள் நடைபெற்றால் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படலாகாது.

113

கூட்டங்களை குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையாவது கூட்டுவதற்கு அழைப்பு விடுக்கப்படுவதையும் மேலும் அர்த்தபுஷ்டியுள்ள செயற்திட்டம் ஒழுங்கு செய்யப்படுகின்றது என்பதை ஆலோசனைக் குழுவின் தவிசாளருடனும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் செயலாளருடனும் ஆலோசனை நடாத்தி பாராளுமன்ற செயலாளர் நாயகம் உறுதிப்படுத்த வேண்டும். ஆலோசனைக் குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் சம்பந்தப்பட்ட அமைச்சு ஒவ்வொன்றினதும் செயலாளர் அல்லது அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேலதிக செயலாளர் சமுகமளித்திருக்க வேண்டும். அத்துடன், அத்தகைய கூட்டத்தின் வேண்டுகோள் விடுக்கப்பட்ட சகல தகவல்கள், அறிக்கைகள் ஆகியவற்றை ஒவ்வொரு கூட்டமும் நடைபெற்று ஒரு வார காலத்திற்குள் வழங்குவதற்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

அத்தகைய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூவர் எழுத்துமூலம் வேண்டுமிடத்து, இயன்றளவு விரைவில் ஆலோசனைக் குழுக்களின் கூட்டங்கள் கூட்டப்படுதல் வேண்டும்.

114

செயலாளர் நாயகம் அல்லது அவரால் பெயர் நியமனம் செய்யப்படும் பாராளுமன்றத்தின் எவரேனும் ஓர் உத்தியோகத்தர் அத்தகைய குழு ஒவ்வொன்றினதும் செயலாளராக இருத்தல் வேண்டும். அவரின் கடமைகளையும் கருமங்களையும் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான ஏனைய பணியாளர்கள், வசதிகள், வளங்கள் ஆகியன அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும். கூட்டங்கள் நடைபெற்று ஒருவார காலத்திற்குள் கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், குழுவின் அடுத்த கூட்டத்தில் ஏற்றுக்கொள்வதற்கு முன்னராக அவை பற்றிய தெளிவும் அங்கீகாரமும் பெறப்படுவதற்கென தவிசாளர், அமைச்சின் செயலாளர், சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆகியோருக்கு இவ்வறிக்கைகளின் பிரதிகளை வழங்குதல் ஆகியவற்றை இவை உள்ளடக்குகின்றன.

115

ஒவ்வொரு அமைச்சினதும் சகல அறிக்கைகளும் ஆலோசனைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுதலும் அதன் பின்னர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும் அத்துடன், ஆலோசனைக் குழுவுக்குப் பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் மீதான ஆலோசனைக் குழுவின் அறிக்கை, ஆற்றுப்படுத்தப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அதன் தவிசாளரால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவசியமெனக் கருதுமிடத்து, குறிப்பிட்ட ஏதாவது விடயம் மேலும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் எடுத்தியம்பலாம். குழு உறுப்பினர் எவரதும் தனிப்பட்ட அபிப்பிராயம் அறிக்கையில் சேர்க்கப்படலாம்.

எனினும், ஆலோசனைக் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் அவ்விடயங்கள் மீதான ஆலோசனைக் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் வரை அவை பாராளுமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைத்ததில் பரிசீலிப்பதற்கும் இடத்துக்கிடம் மாறுவதற்கும் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அல்லது அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற விடயங்களைப் பற்றி பூரண பரிசீலனைக்கு அவசியமான சகல கருமங்களையும் செய்வதற்கும் பாராளுமன்றத்தின் எந்தவோர் ஒத்திவைப்பினாலும் தடைப்படாமல் கூடுவதற்கும் அதிகாரமுடையதாய் இருத்தல் வேண்டும்.

எனினும், சம்பந்தப்பட்ட அமைச்சரின் தீர்மானத்தின் பிரகாரம் அத்தகைய ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றைக் கிடைக்கச் செய்ய முடியாதுவிடின் இது எழுத்துமூலமாக அமைச்சரினால் விளக்கமளிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை அமைச்சருடன் கலந்தாராய்வதற்கென குழுவிற்கு வாய்ப்பு வழங்கப்படவும் வேண்டும்.

ஆலோசனைக் குழுவொன்றின் மூன்று உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண்ணாக இருத்தல் வேண்டும். கூட்ட நடப்பெண் இல்லாத போது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படலாமெனினும், அது கூட்ட நடப்பெண்ணைக் கொண்ட கூட்டமொன்றின் மூலம் உறுதிப்படுத்தினாலன்றி அத்தகைய கலந்துரையாடல்கள் குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளின் பகுதியாக அமையமாட்டாது.

7.

125 ஆவது நிலையியற் கட்டளையின் பந்தி 1 ஐ அதன் இறுதியில் பின்வருவனவற்றை சேர்க்கவும்:—

“நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன் சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் தவிசாளரும் குழுக்களின் பிரதித் தவிசாளரும் இருத்தல் வேண்டும். தவிசாளரோ அல்லது பிரதித் தவிசாளரோ, ஓர் அமைச்சராகவோ அல்லது கருத்திட்ட அமைச்சராகவோ அல்லது பிரதி அமைச்சராகவோ இருத்தலாகாது என்பதுடன் தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவும் பிரதித் தவிசாளர் அரச தரப்பு உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்”

(6) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்க்கவும் :—

“(7)

(i) கொள்கை மாற்றங்கள்

(ii) நிறுவன ரீதியான அல்லது முகாமைத்துவ நடைமுறைகளில் மாற்றங்கள்

(iii) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் இடைநிறுத்தம்.

(iv) அதிகாரிகள் மீது பொறுப்பை நிர்ணயம் செய்தல்

(v) ஒழுக்காற்று நடவடிக்கைகளை விதித்தல்

(vi) குற்றவியல் பொறுப்பு வெளிப்படுத்தல் நிகழ்வின் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்தல்.

ஆகியவை சம்பந்தமான பரிந்துரைகளைக் கொண்டதொரு வருடாந்த அறிக்கையை அரசாங்கக் கணக்குக் குழு சமர்ப்பிக்கும்.

அறிக்கை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படுவதுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அனுப்பப்படும். அவர் ஒரு மாதத்திற்குள் அவ்வறிக்கை தொடர்பில் பதிலளிப்பதுடன் எந்த பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பதை அதனை நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறையுடன் தெரிவிப்பார். எழுப்பப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக எடுக்கப்படும் பரிகார நடவடிக்கைகள் பற்றிய விபரத்துடன் நடைமுறைப்படுத்த முடியாத விதப்புரைகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும்.

அத்தகைய ஒரு பதிலைத் தொடர்ந்து, அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களின் பின்னர், பொருத்தமாயின் அங்கீகரிக்கப்பட்டு அதன்மீதமைவாக, அத்தகைய அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்தி இது பற்றி ஆறு மாத காலத்தற்குள் பாராளுமன்றத்திற்கு மீண்டும் அறிக்கையிடுவதற்கு பொறுப்புடைய அரசாங்கத்திற்கான பரிந்துரைகளாக கருதப்படல் வேண்டும். அத்தகைய அறிக்கைகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை என்பதை சபாநாயகர் உறுதிப்படுத்துவதுடன் தாமதம் ஏற்படின் செயல் நிறைவேற்றுத்துறைத் தலைவரிடம் வினவுவார்.

( 8 ) குழு உறுப்பினர் எவரேனும் ஒருவர் தன்னால் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்தின் மூலமாக முன்கூட்டியே அனுமதி பெறாது தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காவிடின் அவர் தனது உறுப்பாண்மையை வறிதாக்கியதாகக் கருதப்படுதுடன் தெரிவுக் குழு ஏற்றுக்கொள்ளாதவிடத்து, அதே கூட்டத்தொடரின்போது அத்தகைய குழுவில் மீண்டும் நியமிக்கப்படலாகாது.

8.

126 ஆவது நிலையியற் கட்டளையின் பந்தி 1 இன் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்க்கவும் :—

“நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன் சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் தவிசாளரும் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளரும் இருத்தல் வேண்டும். தவிசாளரோ அல்லது பிரதித் தவிசாளரோ, ஓர் அமைச்சராகவோ அல்லது கருத்திட்ட அமைச்சராகவோ அல்லது பிரதி அமைச்சராகவே இருத்தலாகாது என்பதுடன் தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவும் பிரதித் தவிசாளர் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த ஓர் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

(6) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்க்கவும் :—

“(7)

(i) கொள்கை மாற்றங்கள்

(ii) நிறுவன ரீதியான அல்லது முகாமைத்துவ நடைமுறைகளில் மாற்றங்கள்

(iii) கருத்திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களின் இடைநிறுத்தம்

(iv) அதிகாரிகள் மீது பொறுப்பை நிர்ணயம் செய்தல்

(v) ஒழுக்காற்று நடவடிக்கைகளை விதித்தல்

(vi) குற்றவியல் பொறுப்பு வெளிப்படுத்தல் நிகழ்வின் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்தல்.

ஆகியவை சம்பந்தமான பரிந்துரைகளைக் கொண்டதொரு வருடாந்த அறிக்கையை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு சமர்ப்பிக்கும்.

அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அனுப்பப்படும். அவர் ஒரு மாதத்திற்குள் அவ்வறிக்கை தொடர்பில் பதிலளித்தல் வேண்டும் என்பதுடன் எந்த பரிந்துரைகள் ஏற்றுகொள்ளப்படமுடியும் என்பதைக் காலவரையறையுடன் என்றும் குறிப்பிடுதல் வேண்டும். நடைமுறைப்படுத்த முடியாத பரிந்துரைகளை எழுப்பப்பட்ட பிரச்சினைகள் பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக மேற்கொள்ளக்கூடிய பரிகார நடவடிக்கைகளை விபரித்து அவை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும்.

அத்தகைய ஒரு பதிலைத் தொடர்ந்து, அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களின் பின்னர், பொருத்தமாயின் அங்கீகரிக்கப்படும். அதன்மீதமைவாக, அத்தகைய அறிக்கையின் பரிந்துரைகள் அதை அமுல்படுத்துவதற்கும் மற்றும் இது பற்றி ஆறு மாத காலத்தற்குள் பாராளுமன்றத்திற்கு மீண்டும் அறிக்கையிடுவதற்கு பொறுப்புடைய அரசாங்கத்திற்கான பரிந்துரைகளாக கருதப்படல் வேண்டும். அத்தகைய அறிக்கைகள் உரிய நேரத்தில் வழங்கப்படும் என்பதை சபாநாயகர் உறுதி படுத்துவார் மற்றும் அவ்வாறு தாமதம் ஏற்படின் அது பற்றி நிறைவேற்றுத் துறைத் தலைவரிடம் வினவுவார்.

(8) தெரிவுக்குழு உறுப்பினர் எவரேனும் ஒருவர் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு அவர் தன்னால் கையொப்பமிடப்பட்ட விண்ணபத்தின் மூலமாக முன்கூட்டியே அனுமதி பெறாதவிடத்து அவர் அத்தகைய குழுவின் உறுப்பினர் என்பதிலிருந்து விலகிக்கொண்டதாகக் கருதப்படுவார் மற்றும் தெரிவுக் குழு ஒப்புக் கொண்டாலே தவிர, அதே அமர்வின் போது அக்குழுவிற்கு மீண்டும் நியமிக்கப்படமாட்டார்.

9.

128 ஆவது நிலையியற் கட்டளையின் பந்தி (5) இன் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்க்கவும்:—

“ஓர் அறிக்கை பாராளுமன்றத்தில் ஏற்றுகொள்ளப்பட்டதன் பின்னர் அது நிறைவேற்றுத்துறைத் தலைவருக்கு அனுப்பப்படும். அவர், அறிக்கையில் எழுப்பப்பட்ட விடயங்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எந்த விதமான குறைபாடுகளும் மீண்டும் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றை மூன்று மாதங்களுக்குள் மீண்டும் அறிக்கை செய்வார்”

10.

128 அ நிலையியற் கட்டளையின் பந்தி (3) மற்றும் (4) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்க :—

“(3) குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகள் மற்றும் பரிந்துரைகளைக் கொண்ட பதிவொன்றை குழு ஒவ்வொரு காலாண்டிலும் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட வேண்டும். குழுவின் தீர்மானங்கள் தொடர்பாக கேள்விகளை எழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கி பின்னரே அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்”

புதிய பந்தியைச் சேர்க்க —

“(4) குழுவின் கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருப்பதோடு பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்ட நிலையிலும் குழு அதன் விசாரணைகளைத் தொடரலாம்”

“( 5 ) தனது கைப்பட எழுதப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் குழுவின் முன்கூட்டியே அனுமதியைப் பெறாமல் அடுத்தடுத்த இரு குழுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறும் எவரேனும் உறுப்பினர், அத்தகைய குழுவிலுள்ள அவரது உறுப்பாண்மையை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் தெரிவுக் குழுவினால் இணக்கங் காணப்பட்டாலன்றி, அதே கூட்டத் தொடரின் போது அக்குழுவிற்கு மீண்டும் தெரிவு செய்யப்படவும் ஆகாது”

“ ( 6 ) பந்திகள் 2 முதல் 5 வரையானவற்றிலுள்ள ஏற்பாடுகள் பாராளுமன்ற பேரவைக்கும் ஏற்புடையதாகுமெனினும்; தமது பதவிநிலை காரணமாக உறுப்பினர்களாக இருப்போர் பின்வருமாறு

சபாநாயகர் பிரதிச் சபாநாயகரினாலும்

பிரதம அமைச்சர் சபை முதல்வரினாலும்

எதிர்க்கட்சித் தலைவர் அவருக்கு அடுத்தபடியாக கூடிய பாராளுமன்ற பிரதிநிதித்துவமளிக்கின்ற கட்சித் தலைவரினாலும் பதிலீடு செய்யப்படுவர்.

11.

“அரசாங்கக் கணக்குக் குழு” என்ற சொற்கள் இடம்பெறும் எல்லா இடங்களிலும் அல்லது “அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு” என்ற சொற்களைச் சேர்ப்பதன் மூலம் 132ஆம் இலக்க நிலையியற் கட்டளையைத் திருத்துதல்.